விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 356 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 24 திங்கட்கிழமை (09.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அத்தியாவசியப் பொருட்களை பதுக்கினால் சட்டம் பாயும்

### வர்த்தக அமைச்சர் எச்சரிக்கை



(கொழும்பு)

அரிசி மற்றும் தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்திருக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல்வேறு காரணிகளால் அரிசி மற்றும் 16

### நாம் உறவுகளைக் கையளித்தபோது

## கடமையில் இருந்தவர்களை அரசு விசாரணை செய்ய வேண்டும்

### சுவிஸ் செயலாளரிடம் உறவுகள் வலியுறுத்து

(முல்லைத்தீவு)

ஆனந்தபுரம், வட்டுவாகல், தேவி புரம், ஓமந்தை ஆகிய நான்கு இடங் களில் எமது உறவுகள் சரணடைந்த போது கடமையில் இருந்த படை அதி காரிகளை ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசாங்கம் முதற் கட்டமாக விசாரணைக்கு உட்படுத்தி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சுவிட்சர்லாந் தின் இராஜாங்க துணைச் 16

## நாளை முதல் மீண்டும் மழை

(கொழும்பு)

நாளை 10ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் என வளிமண் டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலநிலை மாற்றத்தினால் வட மாகா ணமே அதிகளவில் பாதிக்கப்படும் என வும் தென்மேற்கு வங்காள விரிகுடாவில் 15

## வங்கக்கடலுக்கு செல்ல வேண்டாம்

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்கிழக்கு வங்காள விரிகுடாக் கடற்பரப்பில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடாக் 15

### அரசியலமைப்புக்குள் தீர்வு

# இனப் பிரச்சினை தீராத வரை மக்களின் கோசமும் ஓயாது

### பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண்



(கொழும்பு)

எமது நாட்டில் பாரிய யுத்தமொன்று இடம்பெற்றது. பல தசாப்தங்களாக இனங்களுக்கு இடையிலான பிரச்சினை நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதற் கான தீர்வு வழங்கப்படும் வரையில் மக் களிடத்திலிருந்து வெளிவரும் கோசங் களும் ஓயப்போவதில்லை. இவ்வாறு வெளி விவகாரப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச் சந்திர தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## அரிசி ஆலை மாபியாக்களால் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு

### பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா



(கொழும்பு)

அரிசி ஆலையின் உரிமையை வைத்துள்ள மாபியாக்களினால் திட்டமிட்டு நாட்டில் அரிசித் தட் டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள தாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள் ளார்.

மேலும், அரிசி இறக்குமதி விவகாரத் 15

## பெண்ணொருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

### கற்கோவளத்தில் சம்பவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கற்கோவ ளம் வராத்துப்பளையில் கம்பி வலைகளால் மூடப்பட்ட பொதுக் கிணற்றிலிருந்து பெண்ணொருவர் நேற்று சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவர் அதேயிடத்தைச் சேர்ந்த விமலன் சிந்து (வயது-42) எனும் மூன்று பிள்ளைகளின் தாய் 15

## ஆவாக்குழுவின் தலைவன் கனடாவில் கைது

(ரொரன்ரோ)

யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட ஆவா கும் பலின் தலைவன் எனக் கூறப்படும் இலங்கை யர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட் டுள்ளதாகக் கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அஜந்தன் சுப்ரமணியம்என அழைக் கப்படும்பிரசன்னா நல்லலிங்கம் என்ற 15

## கிளிநொச்சியில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வீரபாண்டிய முனைப்பகுதி யில் உள்நாட்டுத் துப்பாக்கியைக் 16

## புலிச் சின்னத்துடன் மாவீரர் நினைவு

### பிடியாணை பெற பொலிஸார் பிரயத்தனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த மாதம் 27ஆம் திகதி மாவீரர் தின நிகழ்வுகள் பரவலாக இடம்பெற் றிருந்த நிலையில், அவற்றுள் ஏழு நிகழ்வுகள் விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்கும் வகையில் அவர்களது 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விளை நிலங்களில் வன விலங்குகள்

# கட்டுப்படுத்த லால்காந்த கூறிய முறைமை பாரதூரமானது

## கொந்தளிக்கும் விலங்கு ஆர்வலர்கள்

(கொழும்பு)

விவசாய நிலங்களுக்கு வரும் வன விலங்குகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கலாம். அதனால் எதுவித சட்டச் சிக்கலும் ஏற்படாது எனப் பாராளுமன்றில் விவசாயத் துறை அமைச்சர் லால்காந்த தெரிவித்தமை பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

லால்காந்த முன் வைத்த கருத்து முற்றிலும் தவறானது. அதை அரசாங்கம் மீளப் பெற வேண்டும் என வன விலங்குகள் பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் நயனக ரன்வல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வன விலங்குப் பாதுகாப்பு அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையில்,

விவசாய நிலங்களுக்கு வரும் வன விலங்குகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கலாம். அதனால் எவ்வித சட்டச் சிக்கலும் வராது என விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த அண்மையில் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானதொரு கருத்தாகும்.

விலங்குகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என்றால் விளைநிலங்களுக்கு வருகை தரும் விலங்குகளை கொல்லலாமா? என்ற கேள்வி எழும்.

விவசாயிகள் காட்டு விலங்குகளின் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டு வெறுப்புக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறான பின்னணியில் விவசாயிகளுக்கு அமைச்சரின் கருத்து உத்தேவகமளிக்கும் வகையில் உள்ளது.

அமைச்சரின் இந்தப் பாரதூரமான கருத்துத் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்திக் கொண்டு எதனையும் குறிப்பிட முடியாது. அமைச்சரின் கருத்துக்கு அமைய செயற்பட்டு நெருக்கடிக்குள்ளாக வேண்டாம் என்று விவசாயிகளிடம் கேட்டுக் கொள்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)


பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆட்சேர்த்தல்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

EPF ,ETF உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

உணவு மற்றும் சிற்றுண்டி முற்றிலும் இலவசம்.

வயது எல்லை : 40 - 65

074 3303 985 / 071 4993 990

(2705)


# நடைபாதைக் கடைகளை உடன் அப்புறப்படுத்துக!

## வவுனியா நகரசபை அதிரடி

(வவுனியா)

வவுனியா நகரில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் காணப்படும் நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு வவுனியா நகரசபை செயலாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலுப்பையடிப் பகுதி மற்றும் சந்தைக்கு அண்மித்த பகுதிகள், வைத்தியசாலை வீதி ஆகியவற்றில் வியாபாரத்தை முன்னெடுத்து வரும் நடைபாதைக் கடைகளை அகற்றுமாறே குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாளை 10 ஆம் திகதிக்கு முன்னராக இவ்வியாபார நிலையங்களை அகற்றுமாறு கோரப்பட்டுள்ளதுடன், அந்தத் தினத்தில் அகற்றப்படாது விடின் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையினை நகரசபை முன்னெடுக்கும் என்று செயலாளரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வவுனியா மாவட்ட செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதிகளில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்துவருகின்றனர்.

குறிப்பாக நடைபாதைகள் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளதால் பொது மக்கள் பிரதான வீதிகளினூடாக பயணம் செய்கின்றனர். இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன் போக்குவரத்து நெருக்கடி நிலையும் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா நகரசபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வந்தநிலையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. (ந-7,250)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com


# நூதன முறையில் ஏமாற்று மோசடி

## மருதங்கேணியில் கைவரிசை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடை ஒன்றில் நூதன முறையில் நேற்று ஏமாற்று மோசடி ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஐயாயிரம் ரூபா நாணயத்தாளை காண்பித்து பால்மா பெட்டி ஒன்றை வாங்கியுள்ளனர்.

பால்மா பெட்டியையும் மிகுதிப் பணத்தையும் கடைக்காரரிடம் இருந்து பெற்றுக் கொண்ட அவர்கள் தாம் வைத்திருந்த ஐயாயிரம் ரூபா நாணயத்தாளையும் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடியுள்ளனர்.


இவர்கள் இருவரும் மருதங்கேணி பிரதேசத்தில் வேறு கடைகளிலும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

மருதங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிலும் மோசடி செய்ய முற்பட்டு அங்கு பொருத்தியிருந்த சிசிடிவி கமராவைக் கண்டதும் அங்கிருந்து அவர்கள் விலகிச் சென்ற சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

கடை உரிமையாளர் செய்தமுறைப்பாட்டின் பிரகாரம் சிசிடிவி காணொளியின் அடிப்படையில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,60)

2ம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. வல்லிபுரம் புவனேந்திரன்



தோற்றம் 07.07.1943 — மறைவு 01.12.2022

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வத்தில் ஒன்றாகக் கலந்திருக்கும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

என்றும் நினைவுகளுடன் குடும்பத்தினர்

இல.56, கேணியடி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(803)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வார இறுதியில் டில்லி செல்கிறார் ஜனாதிபதி

## அவதானிக்கும் சர்வதேசம்



(கொழும்பு)

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான உயர்மட்ட குழு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு செல்லவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

இந்திய விஜயம் தொடர்பான முழுமையான அறிவிப்பு இவ் வாரம் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் கடற்றொழில், நீரியல்வளங்கள் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழு பங்கேற்கவுள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் டில்லி விஜயத்தை சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் பின்னரான இந்த விஜயமானது தெளிவான மக்கள் ஆணையை முன்னிறுத்தியுள்ளதால் இலங்கை - இந்திய உறவுகளின் எதிர்கால நலன்களில் முக்கியத்துவம் பெறுகிறது.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இருதரப்பு பேச்சுக்கள் இடம் பெறும்.

ஏனெனில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் அண்மைய இலங்கை விஜயத்தின் போதும் மாகாண சபைத்தேர்தல் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். குறிப்பாக புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம் கருத்துக்களை கூறி வருகின்றது.

1972 ஆம் ஆண்டிற்கு பின்னர் கொண்டுவரப்பட்ட நடைமுறையில் உள்ள இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பானது 22 தடவைகள் சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் படவில்லை. இருப்பினும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதில் மாற்றத்தை ஏற்படுத்த அவதானம் செலுத்தியுள்ளது. எனவே டில்லி பேச்சுகளில் புதிய அரசியலமைப்பு விடயம் கருத்தில் கொள்ளப்படும்.

மேலும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்களின் எதிர்காலம் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து இந்திய தரப்பு பேச்சுக்களில் பங்கேற்கும்.

இதேவேளை இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளும் டில்லி பேச்சுவார்த்தைகளில் கவனத்திற்கு உட்படும்.

மறுபுறம் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கு இந்தியாவுக்கு எரிச்சல் ஊட்டும் விடயமாகவே உள்ளது. இதனாலேயே இலங்கையுடன் சீனா நெருக்கமாகச் செயற்படுவதற்கும் சீனப் போர்க்கப்பல்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலுக்குள் நுழைவதற்கும் இந்தியா எப்போதும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

2015 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இத்தகைய எதிர்ப்புகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளது. எனவே ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது சீன விவகாரமும் முக்கிய தலைப்பாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சனத்தொகை கணக்கெடுப்பு

## அச்சமின்றி தகவல்களை வழங்குங்கள்

### புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணிகளுக்காக வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


சனத்தொகை கணக்கெடுப்புக்கு வரும் அதிகாரிகளுக்கு சில வீடுகள் தகவல் வழங்காமல் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி அனோஜா செனவிரத்ன இதனை வலியுறுத்தினார்.

எவ்வாறெனினும் தொகை மதிப்பு கணக்கெடுப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 23ஆம் திகதி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்திற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

# வீழ்ச்சியடைந்த உப்பு உற்பத்தி

## ஆராய்வதாக அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் உப்பு உற்பத்தி வீழ்ச்சி குறித்து ஆராய்ந்து வருவதாக வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.


இலங்கையில் கடந்த வருடமும் இந்த வருடமும் உப்பு உற்பத்தி குறைந்துள்ளதாகவும் இந்த விவகாரம் குறித்து உடனடியாக ஆய்வு செய்து தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த வருடமும் இந்த வருடமும் நாட்டில் உப்பு உற்பத்தி 40 வீதத்தால் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி தற்போது உள்நாட்டில் உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும் இதற்குத் தீர்வாக உப்பை இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உப்பு வர்த்தக நிறுவனங்கள் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

எவ்வாறெனினும் நாட்டில் உள்ள உப்பு இருப்பு மற்றும் நுகர்வுக்கு தேவையான அளவு ஆகியவற்றை ஆய்வு செய்த பின் இறக்குமதி குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவி வழங்கிய ஜப்பான்



(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்காக ஜப்பான் அரசாங்கம் சுமார் 300 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிப் பொருட்களை வழங்கியுள்ளது.

இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதரகம் மற்றும் ஜய்கா நிறுவனத்தின் பங்கேற்புடன் வழங்கப்பட்ட உதவிப் பொருட்களை ஏற்றிவந்த விசேட சரக்கு விமானம் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாகவும் அங்கு அவை இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இதனிடையே மோசமான வானிலையால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கு இந்திய அரசும் ஏராளமான உதவிப் பொருட்களை வழங்கியுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2 ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியா அபார வெற்றி



இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் போட்டி பகல்-இரவாக அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 180 ரன்னில் ஆல் அவுட் ஆனது. அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்சில் 337 ரன் குவித்தது.

அவுஸ்திரேலியா சார்பில் டிராவிஸ் ஹெட் 140 ரன்களையும், லபுஷேன் 64 ரன்களையும் எடுத்தனர். பும்ரா, முகமது சிராஜ் தலா நான்கு விக்கெட் கைப்பற்றினர். நிதிஷ்குமார் மற்றும் ரவிச்சந்திரன் அஷ்வின் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

157 ரன்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இந்தியா அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்து தடுமாறிய நிலையில் இருந்தது. ரிஷப் பண்ட் 28 ரன்னும், நிதிஷ்குமார் ரெட்டி 15 ரன்னும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். இந்தியா தரப்பில் கே.எல். ராகுல் (7 ரன்), ஜெய்ஸ்வால் (24), விராட் கோலி (11), சுப்மன் கில் (28), ரோகித் சர்மா (6) ஆகியோர் பெவிலியன் திரும்பினர்.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க மேலும் 29 ரன் தேவை என்ற நிலையில் கைவசம் 5 விக்கெட் இருந்த நிலையில் தொடர்ந்து ஆடியது. தொடக்கம் முதலே அபார பந்துவீச்சில் மிரட்டிய அவுஸ்திரேலியா பந்துவீச்சாளர்கள் இந்திய அணிக்கு கடும் சவாலை ஏற்படுத்தினர்.

இதன் காரணமாக இந்திய அணி வீரர் ரிஷப் பண்ட் தனது விக்கெட்டை பறிக்கொடுத்து பெவிலியன் திரும்பினார். இவரைத் தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் தொடர்ந்து அவுட் ஆகி வெளியேறினர். எனினும், நிதிஷ்குமார் நிதானமாக ஆடி ரன் சேர்த்து வந்தார். அவரும் 42 ரன்களில் ஆட்டமிழக்க இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 175 ரன்களை மட்டுமே எடுத்து ஆல் அவுட் ஆனது.

இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்த்ததோடு அவுஸ்திரேலிய அணிக்கு 19 எனும் எளிய இலக்கை நிர்ணயித்தது. அதன்படி அவுஸ்திரேலியா அணி விக்கெட் இழப்பின்றி 19 ரன்களை துரத்தி பத்து விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

முன்னதாக பெர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றதன் மூலம் ஐந்து போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்றுசம நிலையை பெற்றது.


இரு அணிகள் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்க இருக்கிறது. (நி-8)




**கனுசி**




**பவித்திரன்**




**நதியா**




**சிவரஞ்சினி**




**தனஞ்சனா**




**துளசிகன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபா குழு தலைவராக ஹர்ஷ

## சஜித்தால் தொடரும் இழுபறி



(கொழும்பு)

கோபா குழுவின் தலைமைப் பதவிக்கு ஹர்ஷ டி சில்வாவை ஐக்கிய மக்கள் சக்தி நியமிக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் கோபா குழுவின் தலைமைப் பதவியை எதிரணிக்கு வழங்குவதற்கு அநுர அரசு தீர்மானித்துள்ளது.


அரசாங்க கணக்குகள் பற்றிய கோபா குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் கோபா குழுவின் தலைமைப் பதவியை ஹர்ஷ டி சில்வாவை ஐக்கிய மக்கள் சக்தி நியமிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், எரான் விக்கிரமரத்னவை தேசியப் பட்டியல் ஊடாக சபைக்குக் கொண்டு வந்து, அவரை கோபா தலைவராக்கு வதற்குரிய பரிசீலனைகளும் இடம்பெறுவதாக உட்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஹர்ஷ டி சில்வாவுக்கும் இடையில் மனக் கசப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளியாகியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய திருவிழா திருப் பலி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். (படம்-ஜோசப்நயன்)

### சதொச ஊடாக

## தேங்காய் விற்பனை அதிகரிப்பு

(கொழும்பு)

சதொச விற்பனை நிலையங்கள் மூலம் தினசரி விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை இன்று முதல் 200,000 ஆக அதிகரிக்கப்படும் என வர்த்தக, வணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசுக்கு சொந்தமான தோட்டங்களில் இருந்து பெறப்படும் தேங்காய்கள் கொழும்பு உட்பட நகர்ப்புறங்களை இலக்கு வைத்து சதொச விற்பனை நிலையங்கள் மூலமாக தலா 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது சதொச நிறுவனம் நாளாந்தம் சுமார் 100,000 தேங்காய்களை விற்பனை செய்கிறது.

அண்மைக்காலமாக பெய்த கடும் மழையினால் தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட இடையூறுகள் தற்போது தணிந்துள்ளதாக தெரிவித்த வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, தட்டுப்பாடு விரைவில் தீர்க்கப்படும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார். (நி-8)


லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(559)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615671 9

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974


# மருந்து தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நாட்டின் சுகாதார கட்டமைப்பில் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான சரியான கொள்முதல் நடைமுறையை பின்பற்றாததன் காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடும் என அதன் செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

வழமையாக புதிய வருடமொன்று ஆரம்பமாகும்போது, சுகாதார அமைச்சினால் குறித்த வருடத்துக்கான மருந்துகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு கொள்வனவுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், கடந்த அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் கடந்த காலங்களில் சுகாதாரத் துறையின் அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டமையினால் தற்போது, மருந்து ஒழுங்குபடுத்தல், கொள்வனவு மற்றும் விநியோகம் ஆகிய செயற்பாடுகளில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, மருத்துவ விநியோகப் பிரிவின் தரவுகளுக்கமைய, அடுத்த ஆண்டில் பாரியளவில் மருந்து தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்சுலின், புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் சில உயிர்காப்பு மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனவே, அரசாங்கம் உரிய கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றி பாரிய பற்றாக்குறைகள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினது செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் சுகாதார கட்டமைப்பினுள் 300 இற்கும் அதிகமான மருந்துகளுக்கு முன்னதாக பற்றாக்குறை நிலவிய போதிலும் தற்போது அது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (நி-8)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு

கார்த்திகை 25 - மார்கழி 10

09 மார்கழி 2024

"ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவரவர் கருத்திற்கு மதிப்பளிப்போம்"

JSAC

16 2024

(சி-1745)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்


# இராசிபலன்

09.12.2024
கார்த்திகை 24, திங்கட்கிழமை
நவமி பின்னிரவு 3.43 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.15 மணிவரை
சுபநேரம் 12.18-1.48 மணிவரை
இராகுகாலம் 7.48-9.18 மணிவரை

சந்திராஷ்டமம்: ஆயிலியம், மகம்.

வளவன்

**மேஷம்** தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**கடகம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட வருமானம் கைகூடும்.

**துலாம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வழிபாடு சிறப்பினைத் தரும், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** எதிர்கால முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புகள் எளிதில் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் விருத்தியுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பிரபலமானவர்கள் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


**தனுசு** திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மீனம்** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

நெருங்கிப் பார்த்தால் [illegible] மரியாதைக்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 126 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் 126 கிலோகிராமிற்கும் அதிக நிறையுடைய கேரள கஞ்சா போதைப்பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது மீட்கப்பட்ட கேரள கஞ்சா போதைப்பொருள் 44 பொதிகளில் பொதியிடப்பட்டிருந்ததாகக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருள் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியுடையது என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8-33)

# மாகாணசபைத் தேர்தலை தாமதமின்றி நடத்துங்கள்

## சுமந்திரன் வலியுறுத்து

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலைக் காலதாமதமின்றி அரசாங்கம் நடத்த வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த வருட இறுதி வரை காத்திருக்காமல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிந்த பிறகு, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னதாக மாகாண சபைகளை முழு அதிகாரத்துடன் இயங்கச் செய்வது முக்கியமானதாகும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்தவொரு தீர்மானத்தையும் தற்போதுவரை அரசாங்கம் எடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு மூன்று வருடங்கள் வரை செல்லும்.

எனவே மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற முறைமை தொடர்பில் தமது பரிந்துரைந்துகளை அனைவரும் முன்வைக்கலாம்.

புதிய அரசியலமைப்பு மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே கொண்டு வரப்படும். இதுதொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு போதிய கால அவகாசம் உள்ளது.

எனவே, மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# எழுதுமட்டுவாள் தெற்கில் பயிர் அழிவுக்கான பதிவுகள்

## கமக்கார அமைப்பு அறிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாள் தெற்கு கமக்கார அமைப்பில் 2024 ஆம் ஆண்டு கால போக நெற் செய்கையில் ஈடுபட்டு பயிர் அழிவடைந்தவர்களுக்கான பதிவுகள் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பதிவுகள் எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை வளாகத்தில் காலை 10 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை இடம்பெறவுள்ள நிலையில் அழிவுக்கான பதிவுகளை மேற்கொள்ள வரும் விவசாயிகள் 2024 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரிச்சிட்டையுடன் வருகை தர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தினத்தில் எழுதுமட்டுவாள் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட செட்டிகேணி, ஒட்டுவெளி, குஞ்சு விழுபளை மற்றும் பெரிய விழுபளை வயல் நிலங்களுக்கான அழிவுப் பதிவுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)

# நெடுந்தீவு கடற்பரப்பில் 8 தமிழக மீனவர்கள் கைது

## விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றத்தில் கைதான 8 தமிழக கடற்றொழிலாளர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பில் சுற்றுகாவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், நேற்று முன்தினம் சனிக்கிழமை தமிழக கடற்றொழிலாளர்கள் எட்டு பேரை கைது செய்ததுடன் அவர்களின் இரு படகுகளையும் கைப்பற்றினர்

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்துறை நீதிமன்ற பதில் நீதவான் சாளினி ஜெயபாலசந்திரன் முன்னிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்படுத்திய போது, 8 பேரையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(நி-8-33)

# தமிழ் கட்சிகள்-சுவிஸ் அதிகாரிகள் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் சுவிஸ் நாட்டின் தூதரக அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பிலான கட்சியின் நிலைப்பாடு தொடர்பிலும், புதிய அரசாங்கத்துடன் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் சுவிஸ் நாட்டின் வெளிநாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிச் செயலாளரும், சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவருமான ரிம் எண்டர்லின், இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிரி வோல்ற், இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் மனிதப் பாதுகாப்பிற்கான முதன்மைச் செயலாளர் ஜெஸ்ரின் பொய்லற், சுவிஸ் தூதரகத்தின் மூத்த தேசியதிட்ட அதிகாரி சுசந்தி கோபாலகிருஸ்ணன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் ப.சத்தியலிங்கம், கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-8-29)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதி அன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். கல்விப்பொதுத் தராதரப் (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கா.பொ.த சாதாரண தர பரீட்சையில் முதலாம் மொழி கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி உயர்கல்வி சான்றிழ் (மட்டம் 2) நிகழ்ச்சித் திட்டத்தினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட அடிப்படை மட்டங்களில் குறைந்தது 30 திறமை மட்டங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது SLQF மட்டம் 2 அல்லது அதற்கு மேல் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளினால் (இலங்கை) வழங்கப்பட்ட ஆசிரிய பயிற்சி சான்றிதழ் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமமான அல்லது மேலான உயர் தகைமைகளைக்கொண்டிருக்க வேண்டும்.

மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 26.01.2025 அன்று நடத்தப்படும் தேர்வு பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.

அத்துடன் விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 08.01.2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு 021 229 0868 என்ற தொலைபேசியூடாகவும் ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என கற்கை நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

லங்கா சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை 25 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவவித்துள்ளார்.

பண்டிகை காலங்களில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது பொதுவாக சந்தையினுள் காணப்படும் ஒரு நிலையாகும். எனவே அதனைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

நாட்டினுள் பொருட்களின் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்கள் முயற்சிக்கின்றார்கள்.

நாம் பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு முயற்சிப்போம்.

மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு சந்தையினுள் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரச நிறுவனங்கள் ஊடாக தலையிடுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

குறிப்பாக சதொச மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை 25 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

பண்டிகைக் காலங்களில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# அடுத்த வாரம் நாட்டை வந்தடையும் அரிசி

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் அரிசி அடுத்த வாரம் இலங்கைக்கு கிடைக்கும் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவற்றில் பெரும்பாலான தொகை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன் அரிசி இருப்புகளை சுமந்து வரும் கப்பல்கள் அடுத்த வாரம் நாட்டை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை நுகர்வோருக்கு உடனடியாக வழங்குவதற்காக துறைமுகத்திற்கு வரும் கப்பல்களில் உள்ள அரிசி 4 மணித்தியாலங்களுக்குள் விடுவிக்கப்படும் என சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமும் ஊடகப் பேச்சாளருமான சிவலி அருக்கொட தெரிவித்தார். தற்போது உருவாகியுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அதிகபட்சமாக 70,000 மெற்றிக் தொன்களுக்கு உட்பட்டு அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அண்மையில் தீர்மானத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## கதிரை சின்னத்தில் களமிறங்கும் சு.க

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட சகல தொகுதிகளிலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான கூட்டணி கதிரை சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது. அதற்கமைய 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுதந்திர கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கூடிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பமாகும். அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தலைமையாகக் கொண்ட கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கூட்டணி தொடர்பில் சில தரப்புக்களுடன் பேச்சு வார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தலைவர் என்ற ரீதியில் சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

கதிரை சின்னத்திலேயே இம்முறை தேர்தலில் களமிறங்குவோம். எமது கூட்டணி சார்பில் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் தேசிய பட்டியல் ஆசனமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதை புதிய ஜனநாயக முன்னணியிடம் வலியுறுத்தியிருக்கின்றோம். விரைவில் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# அரச ஊழியர்களை பணிநீக்கும் திட்டம்

## எதுவுமில்லை-சந்தன அபேரத்ன

(கொழும்பு)

அரச ஊழியர்களை பணி நீக்கம் செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்றும் மாறாக உற்பத்தியை மேம்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அரச வருமானத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக அரச சேவையை குறைக்க வேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் பணி நீக்கம் என்பது வேலை வாய்ப்பில் இன்னொரு நெருக்கடியை ஏற்படுத்துமே தவிர அதனால் தீர்வு எதுவும் ஏற்படாது.

அதேநேரம் எதிர்காலத்தில் அரசசேவையில் ஆட்சேர்ப்பு செய்யும் போது உற்பத்தி திறன் கவனிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் உற்பத்தித்திறன் அம்சத்தில் கவனம் செலுத்தாமல் தற்காலிக முறையில் பட்டதாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்பு செய்தனர்.

அது எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2024/2025 ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

| விடயம் | குறியீட்டு இலக்கம் | வாகனங்களின் எண்ணிக்கை | சேவைக் காலம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | கேள்வி பிணைப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|---|
| வாகன சுத்திகரிப்பு சேவை | NP/KOC/RDHS/42/2/VS/2024/25 | 28 | ஒரு வருடம் | 2,500.00 | 55,000.00 | 20.03.2025 |

2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபார பதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/ 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 10.12.2024 ஆம் திகதி முதல் 22.12.2024 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 23.12.2024 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாக நிதிக்கிளையில் காணப்படும் பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகைக்கான குறியீட்டு இலக்கத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். 23.12.2024 ஆந் திகதி முற்பகல் 10:30 மணிக்கு நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரும் கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
8. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. பெறுகை முன்னறிவுப்பு முன்னரான கூட்டமொன்று (Pre Bid Meeting) கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 16.12.2024 ஆம் திகதி முற்பகல் 10:30 மணிக்கு நடைபெறும்.
10. 01/11/2024 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
12. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.


**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(சி-1746)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 5 வருடங்களின் பின் திறக்கப்படவுள்ள தேவாலயம்



(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நோட்ரே டேம் தேவாலயம் 5 ஆண்டுகளுக்கு பிறகு பொது மக்களின் வழிபாடுகளுக்காக திறக்கப்பட உள்ளது.

மேலும் கடந்த 2019 ஆம் ஆண்டு நோட்ரே டேம் தேவாலயத்தில் பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டது.

இதன் பின்னர் சுமார் 750 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டு இந்த தேவாலயம் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தேவாலய திறப்பு விழாவில் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் உட்பட பல உலகத் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர். (நி-8)

## நெதர்லாந்தின் குடியிருப்பில் வெடிப்புச் சம்பவம்

### ஐவர் உயிரிழப்பு



(ஆம்ஸ்டர்டாம்)

நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் குறைந்தது 5 பேர் உயிரிழந்ததுடன் 4 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், குறித்த சம்பவத்தில் மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்துக்கான காரணம் இது வரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என நெதர்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெடிப்புச் சம்பவத்தில் 5 அடுக்குமாடிக் குடியிருப்புகள் சேதமடைந்ததாக நெதர்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

# கைப்பற்றப்பட்ட

# தப்பியோடிய சிரி



## கிளர்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் அ

இஸ்லாமிய ச

கைப்பற்றி வி


விட்டு தப்பி

அறிவித்துள

மத்திய கிழக்கு நாடான சிரியாவில், கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத், ரஷ்யா, ஈரான் நாடுகளுடன் இணைந்து செயற்படுவதால் அவரது அரசை ஒழிக்க அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளும், துருக்கியும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன. இதற்கென பயங்கரவாதிகளை தூண்டிவிட்டும், ஆயுதங்களைக் கொடுத்தும் உள்நாட்டுப் போர் வெடிப்பதற்கு ஏற்பாடு செய்தனர்.

இதனால் சிரியாவில் 2015 இல் தீவிரமாக நடந்த போர் ஜனாதிபதி ஆசாத்தின் ஆட்சிக்கு முடிவு கட்டிவிடும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து, சிரியாவுக்கு உதவ ரஷ்ய ராணுவம் நேரடியாக களம் இறங்கியது. ரஷ்யாவின் முப்படைகளும் சிரிய கிளர்ச்சி படைகள் மீது தாக்குதல் தொடங்கின. அதை சமாளிக்க முடியாமல் கிளர்ச்சிப் படையினர் ஓட்டம் பிடித்தனர். இதனால் ஜனாதிபதியை ஆட்சியில் இருந்து அகற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் முயற்சி தோல்வியுற்றது.

இந்நிலையில், உக்ரைன் நாட்டுக்கு எதிரான போரில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஈரானும் இஸ்ரேல் உடனான மோதல் காரணமாக படைகளை அனுப்ப முடியாத சூழலில் உள்ளது. சிரியா ஜனாதிபதிக்கு ஆதரவாக போரிட்டு வந்த ஹிஸ்புல்லா படைகளும் இஸ்ரேல் தாக்குதலில் கடுமையான பாதிப்பை



சந்தித்துள்ளனர்.

இத்தகைய சிக்கலான சூழ்நிலையில் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக புதிதாக உருவான கிளர்ச்

## பங்களாதேஷ் எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்திய இந்தியா

(டில்லி)

மேற்கு வங்கம் அருகே துருக்கியில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்களை டாக்கா நிலைநிறுத்தியுள்ளதாகத் வெளியான தகவலைத் தொடர்ந்து பங்களாதேஷ் எல்லையில் இந்தியா கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் எல்லைப் பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதன் பின்னணியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இந்திய எல்லைக்கு அருகில் பைரக்தார் TB2 ஆளில்லா விமானங்கள் நிலைநிறுத்தப்படுவது குறித்த அறிக்கைகளை இராணுவம் சரிபார்த்து வருவதாக வட்டாரங்கள் தெரிவித்தன.



இந்த ஆளில்லா விமானங்கள் உளவுத்துறை, கண்காணிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...து டமாஸ்கஸ்


# ...ரிய ஜனாதிபதி!

## ...ர்ச்சிப்படை வெற்றி

...ல்)

...அரசு படைகளுக்கு எதிராகப் போரிட்டு வந்த கிளர்ச்சி படையினர் டமாஸ்கஸ் நகரை ...விட்டோம் என்றும் ஜனாதிபதி ஆசாத் நாட்டை ...பி ஓடி விட்டார் என்றும் நேற்று அதிகாலை ...துள்ளனர்.

சிப்படை துருக்கி இராணுவத்தின் ஆதரவுடன் முழு வீச்சில் தாக்கு தலை தொடங்கியுள்ளது. இதில்



சிரியாவின் முக்கிய நகரங்களான அலப்பே, ஹோம்ஸ் ஆகியவை அடுத்தடுத்த நாட்களில் கிளர்ச்சிப் படை வசமாகிவிட்டன. இந்த நகரங் களை பாதுகாத்து வந்த சிரியா அரசு படையினர், ஆயுதங்களை கீழே போட்டு தப்பி ஓடி விட்டதாக தகவல் கள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில் கிளர்ச் சிப் படையினர் சிரியா தலை நகர் டமாஸ்கசை பிடிக்கும் நிலை ஏற்பட்டது. உலகின் மிகப் பழைமையான நகரங் களில் ஒன்றான டமாஸ்கஸ், இஸ்லாமியர்கள் மட்டும் இன்றி, கிறிஸ்தவர்கள், யூதர்கள் ஆகியோரும் ஒன் றாக வசித்த நகரம். ஏராள மான புராதன சின்னங்க ளைக் கொண்டுள்ள நக ரம்.

தற்போது இந்த நக ரத்தை தங்கள் வசம் கொண்டுவரும் அளவுக்கு இஸ்லாமிய கிளர்ச்சிப் படை யினர் முன்னேறியுள்ளனர். கிளர்ச்சிப் படைகளின் ஒரு பிரிவு டமாஸ்கஸ் நகரை கைப்பற்றி விட்டதாகவும் அறிவித்துள்ளது. சிரியா அரசு படைகளுக்கு ஆதர வாக, ஈரான், ஹிஸ்புல்லா படைகள் வருமா. ரஷ்ய படைகள் வருமா என்று தெளிவில்லாத சூழல் நிலவு கிறது.

ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சிப் படை டமாஸ்கஸ் நகரில் நுழைந் துள்ள தகவல் வெளியான நிலையில் ஜனாதிபதி ஆசாத் விமானத்தில் தப்பி விட்டார் என்றும் அவர் ரஷ்யா அல்லது ஈரானுக்கு சென்று இருக்கலாம் என் றும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (நி-8)



உளவுப் பணிகளுக்காக பங்களா தேஷின் 67 ஆவது இராணுவத் தால் இயக்கப்படுகின்றன.

பங்களாதேஷ் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இவற்றை இயக்குவதாக கூறினாலும் அத்தகைய மேம்பட்ட ட்ரோன்களை ஒரு முக்கியமான பகுதியில் நிலைநிறுத்துவதன் அவ சியம் குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

ஹசீனாவின் ஆட்சிக் காலத்தில் ஒடுக்கப்பட்ட தீவிரவாதக் குழுக்கள், தற் சமயம் இந்திய எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் மீண்டும் எழுந்துள்ளதாக இந்தியப் பாதுகாப்பு தகவல் கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் நில வும் அரசியல் ஸ்திரமின் மையை பயன்படுத்தி பயங் கரவாதக் குழுக்களும், கடத்தல் வலையமைப்பு களும் இந்தியாவுக்குள் ஊடுருவி வருவதாக [illegible] றது. (நி-8)

# இரு மினிபஸ்கள் மோதி விபத்து

## 26 பேர் உயிரிழப்பு

(அபிட்ஜான்)

ஐவரி கோஸ்ட் நாட்டின் மத்திய மேற்குப் பகுதியில் உள்ள ப்ரோகோவா என்ற கிராமத்தில் 2 மினி பஸ்கள் ஒன்றையொன்று வேகமாக மோதியதில் விபத்து ஏற் பட்டு இரண்டு பஸ்களும் தீப்பிடித்துள்ளன.

இந்த பஸ்களில் இருந் தவர்கள் உடனடியாக வெளி யேற முடியாமல் சிக்கி 26 பேர் உயிரிழந்தனர். 28 பேர் காயம் அடைந்துள் ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

ஐவரி கோஸ்ட்டில் பாழ டைந்த சாலைகள் மற்றும் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் ஆகியவற்றால் அடிக்கடி விபத்துக்கள் ஏற் பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அமெரிக்க டொலரை பலவீனப்படுத்தும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை

## எஸ்.ஜெய்சங்கர் தெரிவிப்பு



(டோஹா)

பிரிக்ஸ் நாடுகளுக்கு 100 சதவீத வரி விதிக்கப் போவ தாக அமெரிக்க ஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள டொனால்ட் ட்ரம்பின் மிரட்டலுக்கு பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் அமெரிக்க டொலரை பலவீ னப்படுத்தும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை என்று தெரிவித்தார்.

கட்டார் தலைநகர் டோஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இது தொடர்பில் உரையாற்றிய அவர் பிரிக்ஸ் நாண யத்தை வைத்திருக்கும் திட்டம் எங்களிடம் இல்லை. அமெரிக்கா இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளி யாகும்.

இந்த விவகாரத்தில் பிரிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகள் ஒரே மாதிரியான நிலைப்பாட்டைக் கொண்டி ருக்கவில்லை என்றும் சுட் டிக்காட்டினார்.

அமெரிக்க டொலருக்கு பதிலாக புதிய நாணயத்தை உருவாக்கவோ அல்லது வேறு எந்த நாணயத்தை யும் திரும்பப் பெறவோ மாட்டோம் என்று பிரிக்ஸ் நாடுகளிடம் உறுதிமொழி கோரி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக தளத்தில் பதி விட்ட ஒரு வாரத்திற்குப் பின்னர் ஜெய்சங்கரின் இந்தப் பதில் வந்துள்ளது.

ஜனவரி 2025 இல் வெள்ளை மாளிகைக்கு மீண்டும் திரும்பத் தயாராக உள்ள குடியரசுக் கட்சித் தலைவர் அமெரிக்க டொலரில் இருந்து விலகிச் செல்லும் திட்டங்களைத் தொடர்ந்தால் பிரிக்ஸ் நாடு கள் 100 சதவீத வரிக் கட் டணங்களை எதிர்கொள் வார்கள் என்றும் எச்சரித்தி ருந்தார்.

கடந்த மாதம் ரஷ்யா வில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது அதன் உறுப்பு நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க டொலருக்கு மாற்றாக வேறு நாணயத்தை பயன்படுத்து வதில் கவனம் செலுத்தியி ருந்தன.

பிரிக்ஸ் குழுவில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா மற்றும் பிற நாடுகள் அடங் கும் என்பது குறிப்பிடத்தக் கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிக்கு வைக்கப்பட்ட
# உலகின் பெரிய தங்கக்கட்டி




(டுபாய்)

டுபாய் தங்கச் சந்தை விரிவாக்கக் கட்டடத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள தங்கக் கட்டியை காண வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெரிய தங்கக் கட்டியுடன் சேர்ந்து புகைப் படமும் எடுத்துக் கொள்ளலாம்.

இஸ்ஸா அல் ஃபலாசி எமிரேட்ஸ் நாணயச் சாலை அந்த ஆகப் பெரிய தங்கக்கட்டியை உருவாக்கியுள்ளது.

300 கிலோ விற்கும் அதிகமான எடையுள்ள அந்தத் தங்கக் கட்டி கின்னஸ் உலகச் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

தங்கம், நகைச் சந்தையைப் பொறு த்த வரை உலகளவில் டுபாய் முன் னணி வகிக்கும் நிலையில் அதனை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அதேவேளை முன்னதாக, 250 கிலோ எடையில் ஜப்பான் ஒரு தங்கக் கட்டியை உருவாக்கி இருந்தது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 400 | 450 | 300-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 700 | 700-750 | 700 |
| தக்காளி | 350 | 320 | 300 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 100-150 | 150 |
| கோவா | 220 | 220 | 200 | 250 | 300 |
| கரட் | 150 | 250 | 200 | 200 | 300 |
| பூசணி | 150 | 150 | 150 | 120 | 200 |
| புடோல் | 180 | 200 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60-90 | 240 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 340 | 320 | 350 | 380 | 400 |
| பாகற்காய் | 1200 | 2000 | 1000 | 1000-1300 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200-250 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 | 130 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 600 | 600-750 | 600 |
| லீக்ஸ் | 280 | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 900 | 700 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 800 | 1000 | -- | 1600 |
| போஞ்சி | 850 | 850 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 150 | 200 |
| தேசிக்காய் | 600 | 450 | 400 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 150 | 80-150 | 150-200 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 700 | 1000 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 300 | 100 | [illegible] | [illegible] |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | [illegible] | 200 |

# இன்று ஒரு தகவல் 279



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கர்வம்

ஒரு தீக்குச்சி தீப்பெட்டியைப் பார்த்துக் கேட்டது. நாம் இரண்டு பேரும் தானே உரசிக்கொள்கின்றோம். ஆனால் நான் மட்டும் தீப்பிடித்து எரிந்து போகின்றேன். நீ அப்படியே இருக்கின்றியே என்றது! அதற்குத் தீப்பெட்டி சொல்லியது. உனக்குத் தலையிலே கனம் இருக்கு. அதனாலே அழிந்து போகின்றாய் என்று. எப்படி இருக்கு இந்தப் பதில்? தலையிலே கனம் உள்ளவர்கள் யாருமே சரியாக இருக்க முடியாது! எவ்வளவு பெரியவங்களா இருந்தாலும் சரி கர்வம் என்கிறது கூடவே கூடாது! இதை விளக்குவதற்கு மகான் ஒருத்தர் (சத்ய சாய் பாபா) ஒரு சம்பவத்தைச் சொல்கிறார். அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்தாராம். அப்போது தென்னிந்தியாவுக்கு வந்தார்.

ராமேஷ்வரத்துக்குப் போனபோது அங்கே இலங்கைக்கு செல்வதற்கு கற்களை அடுக்கி போடப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தான். ஒரு சின்ன குரங்கு அதுக்குப் பக்கத்திலே விளையாடிக்கொண்டு இருந்திருக்கு! அதைப் பார்த்துவிட்டு அர்ஜுனன் சிரிச்சிருக்கின்றான். ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டிருக்கிறது அந்தக் குரங்கு.

ராமன் மிகச்சிறந்த வில்வீரன்! அப்படி இருக்கிற போது அவன் இலங்கைக்கு அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டியிருக்கலாமே! அதை விட்டுவிட்டு போயும் போயும் உன்னை மாதிரி ஒரு கருங்கல் பாலத்தைக் கட்டியிருக்கிறானே! என்றான். அம்புகளாலே பாலம் கட்ட முடியுமா என்று கேட்டது குரங்கு ஏன் முடியாது! என்னாலே முடியுமே என்றான் அர்ஜுனன் அம்பாலே பாலம் கட்டலாம் இருந்தாலும் என்னை மாதிரி குரங்குகள் ஏறி நடந்தால் அது தாங்குமா? அதனாலே தான் ராமர் கருங்கல் பாலமே கட்டினார் போல இருக்கிறது என்றது குரங்கு! அப்படியா சொல்கிறாய் !

நான் வேணும் என்றால் இப்போது அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டுகிறேன்! நீ அது மேலே ஏறி நடந்து பார்! பாலம் விழுந்து விட்டது என்றால் நான் தீ மூட்டி அதன் மேலே குதித்து உயிர்த்தியாகம் செய்கிறேன் என்றான்மிகவும் கோபமா! உடனே அந்த சின்னக் குரங்கு பெரிய உருவம் எடுத்ததாம் கையிலே கதையோட அர்ஜுனன் முன்னால் நின்றார் அனுமன்

என்னுடைய தலைவர் ராமரையா இழிவாகப் பேசுகிறாய். நீ இப்போ பாலம் கட்டு நான் என்னுடைய பலத்தைக் காட்டுகிறேன் என்றான் அனுமன். அர்ஜுனன் தனது காண்டீபத்தை எடுக்கிறான் சரமாரியாக அம்புகளை விடுகிறான் அதெல்லாம் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பாலமாக அமைந்து விட்டது. அர்ஜுனன் தலை நிமிர்ந்து நின்றான். அனுமன் உயரே எழுந்து அங்கேயிருந்து பாலத்திலே வந்து இறங்கினான் பாலம் நொறுங்கிப் போய் விட்டது!

என்ன அர்ஜுனா இப்போது செய்யப்போகிறாய் என்றான் ஏளனமாக! அர்ஜுனன் தலையை தொங்கப் போட்டுக் கொண்டான். சொன்னபடி தீ மூட்டச் சொன்னான் அதிலே குதிக்கிறதுக்காக மூன்று தடவை சுற்றி வந்தான். அப்போது கிருஷ்ணர் அங்கே தோன்றினார் என்ன அர்ஜுனா என்ன நடந்தது என்றார் ஒன்றும் தெரியாத மாதிரி! அர்ஜுனன் வாயைத் திறந்தான் நடந்ததைச் சொன்னான். அர்ஜுனன் சவால் விட்ட படி உயிர் திறந்தே ஆக வேண்டும் என்றான் அனுமன். கிருஷ்ணர் யோசித்தார்.

நல்லது! இந்தச் சவால் விட்டதற்கும் நடந்ததற்கும் யார் சாட்சி. பெரியவர் ஒருவரை வைத்துக் கொண்டு அல்லவா இந்தப் போட்டி நடந்திருக்க வேண்டும் என்றான். அதனாலேயே என்ன இப்போது மறுபடியும் அந்தப் போட்டியை நடத்திவிட்டால் சரி. என்னாலே அந்த அம்புப் பாலத்தை நொறுக்க முடியாதா? என்றான் அனுமன். சரி இப்போது மறுபடியும் அது நடக்கட்டும்! என்றார் கிருஷ்ணர். அர்ஜுனன் அம்புப் பாலம் அமைத்தான். அனுமன் ஏறிக் குதித்தான். பாலம் உடையவில்லை. இப்போது அனுமன் தலையைக் குனிந்து கொண்டான்.


அர்ச்சுனன் நன்றியோடு நிமிர்ந்து பார்த்தான். கிருஸ்ணரின் தோள்களிலேயும் முதுகிலேயும் ரத்தம்! என்ன சுவாமி என்ன நடந்தது என்றான் பதறிப்போய் ! உன் அம்புப்பாலத்தை நான் தான் முட்டுக் கொடுத்துத் தாங்கினேன் அனுமன் குதித்த போது என் மேலே ஏற்பட்ட காயங்கள் இவை பின்பு உன்னுடைய அம்பு பலத்தினாலேயே பாலம் நின்றதென்று நினைக்கிறேன் என்றார். முதலே அர்ஜுனன் அப்புறம் அனுமன் இரண்டு பேருக்குமே கர்வபங்கம் ஆகிவிட்டதாம். அவர்களிடையே இருந்த கர்வம் போய் விட்டது! யாராயிருந்தாலும் கர்வம் கூடாது என்பதை இதிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்திலே நாங்கள் எல்லாம் எந்த விடயத்திற்கெல்லாம் கர்வப்படுகிறோம்! இரண்டு பெண்கள் தங்களுடைய கணவன்மார்களைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொண்டார்கள்.

அதிலே ஒருத்தர் என் வீட்டுக்காரரிடம் எந்த சப்ஜெட்டை கொடுத்தாலும் சரி அந்த விடயத்தைப் பற்றி அழகாக ஒரு மணி நேரம் பேசுவார் என்றாராம். உடனே இன்னொருவர் அது என்ன பிரமாதம் என் வீட்டுக் காரருக்கு சப்ஜெட்டே வேண்டாம். விடயம் இல்லாமலே நாள்முழுவதும் பேசிக்கொண்டு இருப்பார் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிராட்டிகுளம் பகுதியில் குறைகேள் சந்திப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

குறித்த கிராமமானது முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமம் என்பதுடன் வெள்ள அனர்த்தத்தின்போது இந்தக் கிராமத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்ததால் குறித்த சிராட்டிகுளம் கிராமம் தனிமைப்பட்டிருந்தது. இதனால் குறித்த கிராமமக்கள் பெருத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்திருந்தனர்.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த கிராமத்திற்கு நேரடியாகச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்துள்ளார்.

இதன்போது சிராட்டிகுளம் கிராமத்திற்குச்செல்லும் பிரதான வீதிச்சீரமைப்பு, நெல் உலரவிடும் தளம் அமைத்தல், யானைவேலி அமைத்தல், சிராட்டிகுளம் மாதிரிக் கிராமத்தில் தாழ்நிலப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொதுப் போக்குவரத்துப் பிரச்சினை, வனவளத் திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் இதன்போது மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அந்தவகையில் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் குறித்த பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைக் கடிதங்களை தன்னிடம் கையளிக்குமாறு தெரிவித்ததுடன் உரிய தரப்பினருடன் பேசி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (நி-8-299)

# உளவளத்துணை விழிப்புணர்வு செயற்றிட்டம் ஆரம்பம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் தருமபுரம் பொலிஸ் நிலையங்களில் பால்நிலை வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத் துணை விழிப்புணர்வுச் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான பால் நிலை வன் முறையினை இல்லாதொழிக்கும் விழிப்புணர்வு செயற்றிடம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் தருமபுரம் பொலிஸ் நிலையத்திலும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (நி-8)

# சேமமடு வாள்வெட்டு மேலும் ஐவர் கைது

(வவுனியா)

வவுனியா சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, சேமமடு, இளமருதங்குளம் பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்பவத்தில் நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வநிரோயன் (வயது 46) என்ற குடும்பஸ்தர் மரணமடைந்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஓமந்தைப் பொலிஸார் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் பயணித்த வாகனச் சாரதியை அன்றைய தினமே கைது செய்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவுப் பொலிஸாரும், ஓமந்தை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேரை நேற்று கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். வவுனியா, உக்குளாங்குளம், கூமாங்குளம், வேலங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவார்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-8-250)

# வவுனியாவில் பொலிஸார் திடீர் சோதனை பலருக்கு எதிராக வழக்கு பதிவு

(வவுனியா)



வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்திருந்தனர். கடந்த சில நாட்களாக பெய்த மழையின் காரணமாக டெங்கு நோய்த்தாக்கமும் வவுனியாவில் அதிகரித்து வருகின்றது.

இதனையடுத்து வவுனியா நகரம் மற்றும் நகரையண்டிய பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பவற்றில் வவுனியா பொலிஸார் நேற்று திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது ரயர்கள், சிரட்டைகள், வெற்றுப் போத்தல்கள் என்பன பல இடங்களில் காணப்பட்டதுடன் அவற்றில் நீர் தேங்கி நுளம்பு குடம்பிகளும் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களின் வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இதேவேளை டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்து வருவதால் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தமது அயல் பகுதிகளை நுளம்புகள் பெருகாத வண்ணம் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-250)

## ஸ்ரீமத் வைத்தீஸ்வரன் ஆலய பரிவார காளிகோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தியும்-15.12.2024 முத்துமாரி அம்மன் மஹா கும்பாபிஷேகம் கண்டும்-இன்று திங்கள் சோமவாரம் சங்காபிஷேகம் கண்டு அனைவரும் பேரின்பம் பெற்று உய்வோம்

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணி புனைந்த
**அணியே! அணியும் அணிக்கழகே! அனுகாதவர்க்குப்**
**பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே**
பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே!

***அபிராமி அந்தாதி-24***

சிவம் என்னும் செம்மணியின் ஒளியாகத் திகழ்பவள் அம்பிகை. வேதமும் கடந்து நின்ற விமலனைத் தனது ஒளியினால் காட்டுகிறாள் அம்பிகை! தினமணி என்றால் சூரியன் முதலான விண்மணிகளின் சுடரும் ஒளியாகத் திகழ்பவர். அம்பிகை: மணியின் ஒளி. சிவபெருமான் என்ற குருமணியின் ஞானவொளியாகத் திகழ்பவள் "மணியின் ஒளியே" நாளும் கோளும் அடியாரை வந்து நலியாமல் நல்லனவே செய்யும் படி செய்து அருள்பவள் அம்பிகையே!

தன்னை அணுகாதவர்க்குப் பிணியாக இருப்பவள். பிணியாக பந்த பாச கட்டுக்களை நீக்க அவளைச்சரணடைய அவற்றை நீக்குபவள் பிறவிப் பணியை நீக்குவதற்கு சரண் அடைபவர்களுக்கு. அப் பிணியை நீக்கும் மருந்தாவாள்.

புள்ளிருக்கும் வேளூர் அம்பிகையும், சமயபுரம் மாரியம்மனும் பிணிதீர்த்த வரலாறுகள் பல உள்ளன.

நாம் பிறரை வேண்டாது தன்னிறைவு பெறுவதற்கு யாழ்ப்பாணம் ஸ்ரீமத் வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் பரிவாரத் திருக்கோயில் முத்துமாரியம்மன் காளிகோவில் மஹாகும்பாபிஷேக தினத்தில் வழிபடுவோம்.

"இனி எனக்குப் பொருந்தும் பொருள் இல்லை." மனத்தாமரையினில் வந்து புகுந்து இருந்தாள், இக பர சௌபாக்கியங்கள் தருவாள் என 90 ஆவது அபிராமி அந்தாதியிலும், கந்தவர் முனிவர், சித்தர், இயக்கர் என்று எல்லாம் வகைப்படுத்தப்பட்ட அனைவரும் போற்றும் முகிழ் நகையே என 92 ஆவது அந்தாதியிலும் அபிராமிப்பட்டவர் போற்றும் ஸ்ரீமத்வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத் தீஸ்வரன் ஆலய பரிவார அருள்மிகு காளிகோயில் மண்டலாபிஷேகப் பூர்த்தியும், முத்துமாரிஅம்மன் கோவில் திருக்குட முழுக்காட்டு மஹா கும்பாபிஷேகம் 15.12.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் தரிசித்து ஆன்மாக்கள் யாவரும் பேரின்ப வாழ்வு பெறுவோம்.

சோமவாரம்

இன்று சோமவாரம்- சிவன் கோவில் முக்கண் எம்பெருமான் சங்குத்தீர்த்தம் 108 அல்லது 1008 சங்காபிஷேகம் கண்டு தரிசித்து திருவாசகம், திருமுறைகள், அர்ச்சனையாக நாமும் ஓதி அன்பு வித்திட்டு சிவ புண்ணியங்களே எமது தேவைகளைதருவன.பிறவியில் இருந்து நம்மை மீட்க வல்லன. வைத்தீஸ்வரன் ஆலயத்தில் மற்றும் சிவ ஆலயத்திலும் பஞ்ச பூதலிங்கம் தரிசனம் செய்து திருவடிகளைப் போற்றி வழிபடுவோம்.

க.கு.க.சிவபாலன்
செயலாளர்
காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 651





தேவி இது என்ன வார்த்தை? கொடும்பாளூர் பராந்தக சிறிய வேளாரின் செல்வப் புதல்வி தென்திசைச் சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரியின் வளர்ப்புக் குமாரி, பழையாறை இளையபிராட்டியின் அந்தரங்கத்துக்கு உகந்த தோழி, இத்தகைய தங்களை அநாதைப் பெண் என்று யார் ஒப்புக் கொள்வார்கள்? பாதையில் நின்று விசாரிப்பது மரியாதைக் குறைவாயிருக்குமென்று வந்து விட்டேன். வேறொன்றுமில்லை. என்னால் ஏதாவது ஆகவேண்டிய காரியம் இருக்கிறதா?

“ஆம், ஐயா! தங்களால் ஆகவேண்டிய காரியம் அவசியம் இருக்கிறது. தங்களிடம் ஒரு முக்கியமான உதவி கோருவதற்காகத் தான் இந்த வீட்டுக்குள் நான் வந்தேன்” சொல்லுங்கள் என்னால் முடியக்கூடிய காரியமாயிருந்தால் செய்கின்றேன் என்றான்.

தங்களால் முடியாத காரியம் கூட ஒன்று இருக்கமுடியுமா என்ன? இலங்கைப் பிரயாணத்தின் போது தங்களுக்கு நேர்ந்தவற்றையெல்லாம் ஓரளவு நானும் கேட்டறிந்திருக்கிறேன். நான் கோரும் உதவியை அளிப்பதாக முதலில் வாக்குத் தர முடியுமா?

வந்தியத்தேவன் தயக்கத்துடன் “தேவி! உதவி எத்தகையது என்று சொன்னால் நல்லது!” என்றான்.

“ஆம் தங்களை ஏமாற்றி நான் வாக்குறுதி பெறக் கூடாது தான். ஆகையால் காரியத்தைச் சொல்லி விடுகிறேன். சோதிடருக்கும் தெரியலாம் அதனால் பாதகம் இல்லை. நான் புத்த தர்மத்தை மேற்கொண்டு பிக்குணி ஆகிவிடுகிறது என்று தீர்மானித்திருக்கிறேன்”

என்ன? என்ன? இது என்ன வார்த்தை? கூடவே கூடாது! உலகம் பொறுக்காது! நடவாத காரியம்!

இவ்வாறெல்லாம் சோதிடரும் வந்தியத்தேவனும் மாற்றி மாற்றிச் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு வானதி ஆம் புத்த சந்நியாசினி ஆவதென்று முடிவு செய்து விட்டேன். அதில் ஏன் உங்களுக்கு அவ்வளவு ஆட்சேபம்? தவறு என்ன? பழந்தமிழ் நாட்டில் எத்தனையோ பெண்கள் துறவறம் மேற்கொண்டதில்லையா? மாதவியின் புதல்வி மணிமேகலை துறவறம் நடத்தித் தெய்வத்தன்மை பெறவில்லையா? ‘மணி மேகலா தெய்வம்’ என்று அவளை நாம் இன்று போற்றவில்லையா? அவ்வளவு பெரிய ஆசையெல்லாம் எனக்குக் கிடையாது. இந்தப் பயனற்ற வாழ்க்கையை முடித்துக் கொள்ள முயன்றேன். அதில் தவறி விட்டேன். கடவுளுடைய விருப்பம் நான் உயிரோடு இன்னும் சில காலம் இருக்கவேண்டும் என்பது போலும். அப்படி இருக்கக்கூடிய காலத்தைப் புத்த மடம் ஒன்றில் சேர்ந்து ஜீவ காருண்யத் தொண்டு புரிந்து கழிக்க விரும்புகிறேன். இதற்குத் தாங்கள் எனக்கு உதவி செய்யத் தயங்கமாட்டீர்கள் அல்லவா?” என்றாள்.

வந்தியத்தேவன் மனத்தில் ஒரு சிறிய சந்தேகம் உதித்தது. அது அவனைத் திடுக்கிடச் செய்தது.

தேவி! தங்கள் தீர்மானம் நியாயமன்று எனினும் அதைச் சொல்லும் உரிமை எனக்குக் கிடையாது. தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்கள் தங்களுக்கு அதைப்பற்றி யோசனை சொல்ல வேண்டும். தங்கள் பெரிய தந்தை சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரி கூடிய சீக்கிரம் திரும்பி வரப்போகிறார் என்று தெரிகிறது. ஐயா! நான் யாருக்காக வும் காத்திருக்கப் போவதில்லை. யாருடைய யோசனையையும் கேட்கப் போவதில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கொக்கும் மீனும்



ஒரு மடைவாயில் கொக்கு ஒன்று நின்று கொண்டிருந்தது. அந்த மடையில் வந்துகொண்டிருந்த ஒரு கொழுத்த மீன் அந்தக் கொக்கைப் பார்த்தது. பார்த்தவுடன் அது பயந்து அப்படியே நின்று விட்டது.

அந்த மீனின் தாய் அதனிடம் கூறிய சொற்கள் அதற்கு நினைவுக்கு வந்தன. கொக்குகள் நிற்கும் இடத்தைக் கண்டால் அங்கே போகாதே அவை மீன்களைப் பிடித்துத் தின்றுவிடும் என்று அது கூறியிருந்தது. எனவேதான் அந்தக் கொழுத்த மீன் கொக்கைக் கண்டவுடன் பயந்து நின்று விட்டது.

ஆனால் அதைக் காட்டிலும் சிறிய மீன்களெல்லாம் சிறிதும் அச்சமில்லாமல் மடைவாய் வழியாகச் சென்று கொண்டிருந்தன. கொக்கு நிற்பதைப் பற்றி அவை கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. ஒன்றன் பின் ஒன்றாக மீன்கள் தன்னைக் கடந்து செல்வதைக் அந்தக் கொக்கு கவனித்ததாகவும் தெரியவில்லை. அது சும்மா நின்று கொண்டிருந்தது.

அந்தக் கொழுத்த மீன் குஞ்சு சிறிது நேரம் நின்று பார்த்தது. “இந்தக் கொக்கு ஏமாளிக் கொக்குபோலிருக்கிறது! இத்தனை மீன்களில் ஒன்றைக் கூடப் பிடித்துத் தின்னவில்லை. இவ்வளவு சின்ன சின்ன மீனெல்லாம் அந்தக் கொக்குக்குப் பயப்படாமல் போகும் போது நான் ஏன் பயப்பட வேண்டும்“என்று நினைத்துக் கொண்டு அதுவும் புறப்பட்டது.

மடைவாயை அந்தக் கொழுத்த மீன் குஞ்சு நெருங்கியது. திடீர் என்று அதன் மண்டையில் ஒரு குத்து விழுந்தது. அதற்குத் தலை சுழன்றது மயக்கம் வந்தது. அதே சமயம் கொக்கு அதைப் பிடித்துக் கொன்று தின்றது.

மறுபடியும் அந்தக் கொக்கு இன்னொரு கொழுத்த மீன் எப்போது வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டு மடைவாயின் கரையில் நின்று கொண்டிருந்தது.

கருத்துரை :- ஓடுகிற மீனையெல்லாம் ஓட விட்டு விட்டுப் பொருத்தமான மீன் வரும் போது சட்டென்று கொத்தித் தின்றுவிடும் கொக்கு அடக்கமாக உள்ளவர்கள் கொக்குப் போல் தகுந்த காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பவர்களே அவர்களை ஏமாளிகள் என்று எண்ணி விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட முடியுமா?

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு தமிழ் அரசியல் கட்சிகளுக்கான மிகப்பெரிய படிப்பினை.

ஆம், நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட வெற்றி என்பது தனித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கான வெற்றி மட்டும் என்று எவரும் பொருள் கொள்ளலாகாது.

மாறாக, நம் தமிழ்க் கட்சிகளுக்கான இறுதி எச்சரிக்கை என்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேநேரம் 2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வடபகுதித் தமிழ் மக்களின் சிந்தனை ஒரே மாதிரியாக இருந்துள்ளதென்பதையும் இவ்விடத்தில் நாம் புரிந்து கொள்வது அவசியம்.

சரி, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு; அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஆழ்ந்து சிந்திக்க வைக்குமாயின், ஒற்றுமைப்படுதல் என்பதே முடிவாக இருக்கும்.

இங்குதான் மகா இடர்பாடு உள்ளது. அதாவது கடந்த காலங்களில் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற சிந்தனை தமிழ் மக்களின் நலன்சார்ந்தவர்களிடம் இருந்தது.

அவ்வாறானவர்கள் ஒன்றுசேர்ந்து தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்கான முயற்சிகளை எடுத்தனர்.

எனினும் அந்த முயற்சிகள் வெற்றிதரவில்லை. ஈற்றில் 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி உருவாகிய தமிழ் மக்கள் பேரவை தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டது. அந்த முயற்சியின் பயனாக தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டன.

இருந்தும் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தரப்புகள் அந்த ஒற்றுமையைத் தேர்தலில் தோற்றவர்களின் கூடாரம் என்று விமர்சித்துக் கொண்டன.

ஊடகவியலாளர்கள் சிலர் தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக எழுதினர். சில சிவில் அமைப்புகள் எப்படியும் தமிழ் மக்கள் பேரவையை வெட்டி விழுத்த வேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டிருந்தன.

ஈற்றில் அவர்களின் வஞ்சகத்தனமே வெற்றி பெற்றது.

என்ன செய்வது எழுதாக்குறைக்கு அழுதால் தீருமோ என்பது போல தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டாளர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

அன்று தோற்றவர்களின் கூடாரம் என்று தமிழ் மக்கள் பேரவையை விமர்சித்தவர்கள் இன்று மௌனமாகி உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் அரசியல் கட்சிகள் இனியேனும் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற குரல் தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் இருந்து கேட்கிறது.

எனினும் அந்தக் குரல்களை தமிழ் மக்கள் எப்படிப் பார்ப்பார்கள் என்பதுதான் ஆய்வுக்குரியது.

ஆம், தமிழ் மக்கள் தமக்கான ஓர் அரசியல் பாதையை வகுத்துள்ளனர். அந்தப் பாதையில் முட்களையும் கற்களையும் கொட்டுவதற்காகவே தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை என்ற கோசத்தை இடுகின்றன என மக்கள் நினைப்பதற்கான சாத்தியம் நிறையவே உண்டு.

ஆகையால், தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டாலும் அதனை தோல்விக்கான பிராயச்சித்தமாக மக்கள் கருதுவார்களேயன்றி, தமிழ் இனத்துக்கு விமோசனம் கிடைப்பதற்கான ஒற்றுமை என மக்கள் ஒருபோதும் கருதமாட்டார்கள்.

# காற்றில் பறந்ததா அநுரவின் மின்சாரக் கட்டணக் குறைப்பு

## தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

இலங்கை மின்சார சபை 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது. அவ்வாறிருக்கையில் ஏன் மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது. தேர்தலுக்கு முன்னர் மின்சாரக்கட்டணத்தை மூன்றில் இரண்டு மடங்கால் குறைப்பதாகக் கூறிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தற்போது என்ன பதில் கூறப் போகின்றார் என தொழிற்சங்கங்கள் கேள்வியெழுப்பியுள்ளன. அத்தோடு மின்சார சபையின் முன்மொழிவுக்கும் கடும் எதிர்ப்பினையும் வெளியிட்டுள்ளன.

தற்போது நடைமுறையிலுள்ள மின் கட்டணத்தை எதிர்வரும் 6 மாதங்களுக்கு அவ்வாறே பேண முடியும் என இலங்கை மின்சாரசபை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிந்துள்ளது. இந்நிலையிலேயே மின்சாரசபையின் இந்த முன்மொழிவுக்கு தொழிற்சங்கங்கங்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

ஐக்கிய தொழிற்சங்கம் மற்றும் மின் பாவனையாளர்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இலங்கை மின்சார சபை விலை சூத்திரத்தால் 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது. தற்போது நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிந்தோடுகின்றன. குறைந்த செலவிலேயே மின் உற்பத்தி இடம்பெறுகிறது.

எனவே உடனடியாக மின்சாரக் கட்டணத்தைக் குறைக்குமாறு தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் வேட்பாளரான ரஞ்சன் ஜயலால் கூறினார். அது மாத்திரமின்றி டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் விசேட கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

தற்போது மின் அலகுகளுக்கு வரி அறவிடப் படுவதில்லை. ரஞ்சல் ஜயலால் கூறியதைப் போன்று மின்சாரசபை 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது.

எனவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாவதற்கு முன்னரும், அதன் பின்னரும் கூறியதைப் போன்று 3000 ரூபாவாகக் காணப்படும் மின் கட்டணத்தை 1000 ரூபாவாகக்குறைக்க வேண்டும் என்றார்.

அகில இலங்கை சிறு தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிருக்ஷ குமார குறிப்பிடுகையில்,

தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, 3000 ஆகக் காணப்படும் மின்சாரக் கட்டணத்தை 1000 ரூபாவாகக் குறைப்பதற்கு நீங்கள் விரும்பவில்லையா என்று மக்களிடம் கேட்டார்.

அதனை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான உங்களின் திட்டமிடல் எங்கே? தாத்தாவின் ஆடைகளையே பேரனும் அணிந்து கொண்டு பயணிக்கின்றார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

உங்களுக்கு வாக்களித்த மக்களை மறந்து விட்டீர்களா என்று ரஞ்ஜன் ஜயலாலிடம் கேட்கின்றோம். மக்களுக்காகவும், மின்சாரப் பாவனையாளர்களுக்காகவும் ஏன் குரல் கொடுக்காமலிருக்கின்றீர்கள்? மேற்கத்தேய ஆடையணிந்த அதிகாரிகளின் ஆலோசனைகளின் படி தீர்மானங்களை எடுத்தால், கோட்டாபய ராஜபக்ஷவின் கதியே உங்களுக்கும் ஏற்படும் என்பதை நினைவுபடுத்துகின்றோம் என்றார்.

மின்சாரப் பாவனையாளர்களின் சங்கத் தலைவர் ஏ.ஆர்.அதுல தெரிவிக்கையில்,

ஆட்சிக்கு வர முன்னர் மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று தேசிய மக்கள் சக்தியினர் குறிப்பிட்டனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களையே இந்த திசைகாட்டி அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்கிறது.

மின்கட்டணத்தை உடனடியாகக் குறைக்குமாறு அன்று தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்த வசந்த சமரசிங்க போன்றோர் வீதிக்கு இறங்கிப் போராடினர். இன்று அவர்கள் எங்கிருக்கின்றனர்? ரஞ்ஜன் ஜயலால் போன்றவர்களை கண்டுபிடிக்கவும் கடினமாகவுள்ளது என்றார். (ந-7)

# அமைச்சர்களின் பங்களாக்களுக்கு கடும் கிராக்கி

அமைச்சர்களின் பங்களாக்களை தமது பாவனைக்காக வழங்குமாறு சுமார் 15 தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகப் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தவிர சுமார் ஏழு வெவ்வேறு அமைப்புகள் அமைச்சர்களின் பங்களாக்களை வாடகைக்குக் கோரியுள்ளன.

மேலும் அமைச்சர்களின் பங்களாக்களை தங்கள் பயன்பாட்டிற்கு தருமாறு மூன்று நீதிபதிகளும் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே, சுற்றுலாத்துறையை மேம்படுத்த அமைச்சர்களின் பங்களாக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அமைச்சின் சில அதிகாரிகள் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனர். (ந-7)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

ஹதரலியத்த பொலிஸ் பிரிவில் தேதுனுபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மின்சாரம் தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும் குறித்த நபர் கால்நடை வளர்ப்பு மேற்கொண்டு வந்த நிலையில் பண்ணையைச் சுத்தம் செய்யும் நடவடிகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தருணத்தில் மின்சாரம் தாக்கி உயிழந்துள்ளார்.

சடலம் தற்போது பிரேத பரிசோதனைகளுக்காக ரம்புக்கனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹதரலியத்த பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7)

# ரூ.5 ½ கோடி பணமோசடி வைத்தியரொருவர் கைது

(கொழும்பு)

தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகக் கடமையாற்றிய வைத்தியர் ஒருவர் 5 கோடி 50 இலட்சம் ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோனஹேன, வேபட [illegible] கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொது முறைப்பாட்டுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் [illegible] மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# சாரதிகளுக்கு போதையூட்டி நகைகள் கொள்ளை

## நால்வர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வாடகை வாகன சாரதிகளுக்குப் போதையேற்றி அவர்களின் நகைகள் மற்றும் பணத்தினை கொள்ளையடித்து வந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் முச்சக்கரவண்டி, கார் போன்ற வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அதில் பயணம் செய்யும் போது, சாரதிகளுக்குப் போதைப் பொருளை வழங்கி போதையில் சாரதிகள் மயங்கிய பின்னர் அவர்களின் நகைகள் மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்து வந்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் உள்ள சுமார் 15 பொலிஸ் பிரிவுகளில் இவர்கள் தமது கைவரிசையைக் காட்டி வந்துள்ளனர்.

இது குறித்துப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த நால்வரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் சுமார் 41 இலட்ச ரூபாய் பெறுமதியான நகைகளை கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகைக் கடைகளில் இருந்து மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# முரலிப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical name- Dimocarpus longan**
**Family- Sapindaceae**
**Engl-Longan fruit**


முரலிப்பழம் ஆசியா, சீனா போன்ற நாடுகளைத் தாயகமாகக் கொண்டது. இனிப்பும் சுவையும் விரும்பத்தக்க மணமும்உடையது. முரலிப் பழங்களை சீனாவைச் சேர்ந்த மக்கள் நித்திரை இன்மையிலிருந்து பாம்புக் கடி வரை பல மருந்துகளில் பயன்படுத்தி வருகிறார்கள். பழத்தை உரித்துப் பார்க்கும் போது கண் போலவே காட்சி தரும். இந்தப் பழம் Dragen eye எனவும் அழைக்கப் படுகிறது.

இப் பழமானது உடலில் இருக்கும் இரத்த அணுக்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்துகிறது.

இதனால் குருதிச் சோகை நோய் உள்ளவர்கள் இந்தப் பழத்தை சாப்பிடலாம். இந்தப் பழத்தில் இரும்புச்சத்து அதிகமாக காணப்படுகின்றது.

இப் பழங்களைச் சாப்பிட்டு வருவதால் நரம்புகளின் செயற்பாடு சீராகின்றது. இதனால் மன அழுத்தம், தூக்கமின்மை என்பன நீங்குகிறது. முரலிப்பழத்தில் பொலிபினோல் சத்துக்கள் காணப்படுவதால் புற்றுநோய்க் கலங்களை வளரவிடாமல் தடுக்கிறது. இதனால் குடல் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், கருப்பை கழுத்து புற்று நோய் போன்றவை வராமல் தடுக்கிறது.

ஒவ்வாமை, தோல் போன்ற பிரச்சினை உள்ளவர்கள் இப் பழங்களை சாப்பிட்டு வர அப் பழத்திலுள்ள காலிக்கமிலம், எபிலெக்ஸின் எலிக்ரெக்கமிலம் போன்றவை காணப்படுவதால் மேற்படி தோல் நோய்கள், ஒவ்வாமை காயங்கள் போன்றவற்றை நீக்கக் கூடியதாக இருக்கும். முரலிப் பழம் சாப்பிட்டு வர சருமம் நல்ல பாதுகாப்பாக இருக்கும். இதிலுள்ள பைற்றோ கெமிக்கல்ஸ் சருமத்தை பளபளப்பாக



வைத்திருக்க உதவும்.

இப் பழங்கள் சாப்பிட்ட பின்பு கிடைக்கும் விதைகளில் சப்னோனின் எனும் வேதியற் பொருள் இருப்பதால் இதன் விதைகளைப் பொடி செய்து சம்போ பவுடராக பயன்படுத்தி வர தலையிலுள்ள பொடுகுகளை நீக்கக் கூடியதாக இருக்கும்.

முரலிப் பழத்தில் நுண் ஊட்டச்சத்துக்கள் அதிகமாக இருந்தாலும் கலோரிப் பெறுமானம் குறைவாக உள்ளதால் உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களும் இப் பழங்களைச் சாப்பிடலாம்.

இப் பழங்களில் பொட்டாசியம் சத்து அதிகமாகக் காணப்படுவதால் இது இரத்த நாளங்களில் அழுத்தத்தைக் குறைத்து இரத்த அழுத்தத்தை சீராகப் பேணக் கூடியதாக இருக்கும்.

சீனா நாட்டில் இன்றும் இதன் பழங்களைச் சாப்பிட்ட பின்பு கிடைக்கும் விதைகளைப் பொடி செய்து பாம்புக் கடிக்கு பயன்படுத்துகிறார்கள். விஷத்தை நீக்கும் சப்போனின் எனும் வேதியற் பொருட்கள் இப் பழத்தின் விதைகளில் காணப்படுகிறது.

எனவே இதன் பழங்களைச் சாப்பிட்ட பின்பு கிடைக்கும் விதைகளை சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இது ஓர் வெப்ப மண்டல பழமரமாகும். எனவே எமது பிரதேசங்களிலும் வளர்க்கக் கூடிய பழமரமாகும். சரியாக இந்த மரத்தைப் பராமரித்து வளர்ப்போமாகில் மூன்று வருடங்களின் பின் நன்றாக காய்க்கக் கூடியதாக இருக்கும்.

சில பருவ காலங்களில் மட்டும் இப் பழங்களைச் சாகுபடி செய்யலாம். செரிமானப் பிரச்சினை உள்ளவர்களுக்கு சிறந்த பழமாகும். இப் பழங்களில் உயிர்ச்சத்து C காணப்படுவதால் எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் இப் பழங்களை தவிர்ப்பது நல்லது. இப் பழங்கள் அதிக இனிப்பு சுவை உடையதுடன் 100 கிராம் முரலிப் பழத்தில் 65 கிராம் சீனிச்சத்து காணப்படுவதே காரணமாகும்.

அத்துடன் இப் பழங்களில் நார்ச்சத்து குறைவாகவே காணப்படுகிறது. 100 கிராம் பழத்தில் 1 கிராம் நார்ச்சத்தே காணப்படுகிறது.

இப் பழங்களில் அதிகளவான உயிர்ச்சத்து C,B போன்றன காணப்படுவதால் தோல் நோய்கள் முக்கியமாக சொரியாஸிஸ் எனும் தோல் நோயை ஆற்றக் கூடிய தன்மையும் இப் பழங்க



ளுக்கு உண்டு. குருதியில் குருதிச் சிறுதட்டுக்கள் மற்றும் ஈமோகுளோபின் போன்றவற்றை அதிகரிக்கச் செய்யும் சத்துக்கள் இப் பழங்களிற்கு உண்டு. இதனால் கர்ப்பமான பெண்களும் இப் பழங்களைச் சாப்பிடலாம்.

முரலிப் பழத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இப்பழத்தில் உள்ள Hypnotic deri vatives தூக்கமின்மையை நீக்குவதோடு தூங்கும் நேரத்தையும் அதிகரிக்கச் செய்கிறது.

நல்ல சாறான ஆன பழங்களாகும். நெடுங்கேணி காட்டுப் பிரதேசங்களில் பழங்களை அதிகளவு சாகுபடி செய்யலாம். இருந்தும் சில பருவ காலங்களில் மட்டுமே பெரும் பாலும் ஆனி, ஆடி மாதங்களிலேயே இப் பழங்கள் பழுக்கக் கூடியதாக இருக்கும்.

இப் பழங்கள் மரம் முழுக்க கொத்துக் கொத்தாக காய்க்கக் கூடியது. இப் பழங்களில் செம்புச் சத்து. நாகச் சத்து. மக்னீசியம், பொஸ்பரஸ், கல்சியம் , மங்கனீசு போன்ற சத்துக்களும் காணப்படுகின்றன.

இலங்கையைத் தவிர இந்தியா, சீனா, தாய்லாந்து , வியட் நாம், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் வளரக்கூடியது. மூட்டு வியாதிகளுக்கும் இப் பழங்கள் சிறந்ததாகும் அதாவது Anti-arthritic தன்மை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவாக்குழுவின்...

32 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு பிரான்ஸில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வரும் இவர், இலங்கையிலும் பல கொலைகளுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, சந்தேகநபரைக் கைது செய்ய இலங்கைப் பொலிஸாரால் சர்வதேச பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில்,

2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையிலிருந்து தப்பிச் சென்ற இவர், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தங்கியிருந்ததன் பின் கனடாவுக்குச் சென்றபோது கனேடிய பாதுகாப்புப் பிரிவால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பிரான்ஸ் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகக் கனேடிய பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர். (ந-7)

## அரிசி ஆலை...

திலும் பாரிய மோசடிக்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "தேவைக்கு அதிகமாக அரிசி இறக்குமதி செய்யப்படுவதால் அடுத்த அறுவடையின்போது விவசாயிகள் நியாயமான விலையில் நெல்லை விற்பனை செய்ய முடியாத அபாயம் ஏற்படும்.

காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகவே தேங்காய்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால், அரிசித் தட்டுப்பாடு அரிசி ஆலை உரிமையாளர்களின் மாபியாக்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் நெல் மற்றும் அரிசி என்பவற்றை மறைத்து வைத்திருக்கின்றனர் என்றும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மற்றும் அரிசியின் அளவை அரசாங்கத்தால் இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும். சில அதிகாரிகள் இந்த அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அடிபணிந்துள்ளதால் அல்லது அவர்களால் அரசாங்கத்துக்கு தவறான தகவல் வழங்கப்படுவதன் காரணமாகவே அதனை அரசாங்கத்தால் கணிப்பிட முடியாதுள்ளது.

அரிசித் தட்டுப்பாட்டை அரசாங்கத்தால் முகாமைத்துவம் செய்ய முடியும். அதேபோன்று வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறப்படுவது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்படுவதோடு ஊழல் மிக்கதாகவும் உள்ளது. அரிசியை இறக்குமதி செய்வதற்கான பணம் இந்த பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது. அரிசியைப் பதுக்கித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ள அவர்களாலேயே அரிசியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

இதன் பின்புலத்தில் பாரதூரமான பின்விளைவு ஏற்படும். அடுத்த அறுவடையின்போது நாட்டினுள் தேவைக்கதிகமான அரிசி காணப்பட்டால், விவசாயிகளுக்கு நெல்லுக்கான நியாயமான விலை கிடைக்காத நிலையில் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். எனவே, இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்" என்றார். (ந-7)

## நாளை முதல்...

தெற்கு அந்தமான் தீவுகளுக்கு அருகில் உருவாகியுள்ள கொந்தளிப்பான தன்மை காரணமாகவே இந்தக் கால நிலை மாற்றம் எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னறிவிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-7)

## வங்கக்கடலுக்கு...

கடற்பரப்புகளுக்கு மேலாக உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மேலும் வலுவடைந்து மேற்கு - வடமேற்குத் திசையை நோக்கி நகரக்கூடும்.

இதன்காரணமாக, அந்த கடற்பரப்புகளில் காற்று, மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, குறித்த பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## புலிச் சின்னத்...

அடையாளங்களுடன் இடம்பெற்றுள்ளதாக வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தினக் தனபால தெரிவித்தார்.

இத்தகைய சட்டவிரோத நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் மேலும் கருத்துரைத்துள்ள அவர், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு வசதியாக அந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்த நபர்கள் குறித்த அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்த ஏழு நிகழ்வுகளில் நான்கு நிகழ்வுகள் பருத்தித்துறை பிரதேசத்திலும், இரண்டு கிளிநொச்சியிலும், ஒன்று யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏற்பாட்டாளர்கள் தொடர்பான தகவல்கள் காணொளிப் பதிவுகள் மற்றும் தகவலறிந்தவர்கள் மூலம் பெறப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பிடியாணையை பெறுவதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களிலும் பொலிஸார் இந்த விடயத்தை அறிக்கையிட்டுள்ளனர் என்றார்.

இதேவேளை முகநூலில் விடுதலைப் புலிகளின் தலைவரது பிறந்தநாளுக்கு வாழ்த்துத் தெரிவித்த 6 பேரிடம் கடந்த வாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ந-7)

## பெண்...

என இனங்காணப்பட்டுள்ளது.

தமது தாயை நேற்று முதல் நீண்டநேரமாகக் காணவில்லை என அவரது பிள்ளைகள் மற்றும் அயலவர்கள் தேடிச் சென்ற வேளை குறித்த கிணற்றுக்கு அருகில் உயிரிழந்த பெண்ணின் கைத்தொலைபேசி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் சந்தேகமுற்ற மகன் கம்பி வலையால் மூடப்பட்ட கிணற்றை எட்டிப்பார்த்தவேளை தாய் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது குறித்து பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்ததோடு சடலத்தினை மீட்டு பிரேத பரிசோனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ந-7,60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.12.08
சீட்டிழுப்பு இலக்கம் 5679
U 5 9 4 3 2 7
அத சம்பத
U 4 3 2 7
சீட்டிழுப்பு இலக்கம் 254

தன நிதானய
திகதி - 2024.12.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1709
O 23 43 67 80 O
Double Chance 47770

மெகா பவர்
திகதி 08/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2027
R 05 08 16 33 65
081940

லக்கி 7 VIP
திகதி 2024.12.08
சீட்டிழுப்பு இலக்கம் 505
F 0 4 8 1 6 4 F

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3921
சீட்டிழுப்பு திகதி 08.12.2024
A 59 62 67 70
A 105320

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.08
சீட்டிழுப்பு இலக்கம் 988
விருச்சிகம் 12 19 38 50 விருச்சிகம்
036566 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பால் சம்பத
08.12.2024 வெற்றி வாரம் 387
J 9 4 5 7 7 6
46763
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,878,539.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2653
சீட்டிழுப்பு திகதி 2024.12.08
தினம் ஞாயிற்றுக்கிழமை
14 50 60 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,732,501.60

சனிதா
திகதி 08.12.2024 வெற்றி வாரம் 4814
19 62 66 68 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,696,240.00
95350

சசிரி
வெற்றி வாரம் 574
சீட்டிழுப்பு திகதி 08.12.2024
ஞாயிற்றுக்கிழமை
26 42 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4365
சீட்டிழுப்பு திகதி 08.12.2024
தினம் ஞாயிற்றுக்கிழமை
12 17 41 42 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,406,482.80
116605

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 09 11 24 30 46
சீட்டிழுப்பு வாரம் 1829
08.12.2024 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,599,944.20

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2479
சீட்டிழுப்பு திகதி : 2024.12.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,591,400.80
35 39 49 71 S
785292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப் பிர...

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவை என்பதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருப்பதோடு அந்த அரசியலமைப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளடக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்படும்.

2015-2019 காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் இருந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை மையப்படுத்திய புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். அதனை நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டுள்ளோம்.

இருப்பினும், அந்த இடைக்கால அறிக்கையை விடவும் முற்போக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாம் அதுபற்றிக் கலந்துரையாடுவதற்குத் தயாராகவே உள்ளோம்.

எவ்வாறாக இருந்தாலும் 22 திருத்தங்கள் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்குப் புதிய அரசியலமைப்புத் தேவை என்ற விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எமது அமைப்பின் கொள்கைகளை மையப்படுத்திய விடயத்தினை முன்வைப்போம். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதவில்லை.

எமது முன்மொழிவுகள் தீர்வினை அடைவதற்கான ஒரு பயணப் பாதையாகும். சிலதரப்பினர் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து அந்த வழியால் தீர்வினை அடையலாம் என்று குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டில் அனைத்துப் பிரஜைகளும் சம அந்தஸ்துடன் சாந்தியும் சமாதானமுமாக வாழ வேண்டும். வளங்கள் சமமாகப் பகிரப்பட வேண்டும் என்பது தான் இலக்காக உள்ளது. அதனை அனைவரினதும் பங்களிப்புடன் அடைந்து கொள்வது தான் நோக்கமாக உள்ளது. இதேநேரம், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்றபோது 13ஆவது திருத்தச்சட்டம் மட்டுமல்ல, முதலாவது திருத்தத்திலிருந்து 22ஆவது திருத்தம் வரையில் அகற்றப்பட்டு அவற்றின் உள்ளடக்கங்களைக் கொண்டதொரு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அதேநேரம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் மாகாண சபை முறைமை நீக்கப்படாது. நாட்டில் யுத்தமொன்று இடம்பெற்றது.

பல தசாப்தங்களாக இனங்களுக்கு இடையிலான பிரச்சினை நீடித்துக் கொண்டு தான் உள்ளது. அதற்கான தீர்வு வழங்கப்படும் வரையில் மக்களிடத்திலிருந்து வெளிவருகின்ற கோஷங்கள் ஓய்ப்போவதில்லை.

எனவே எமது நோக்கம், அனைவரினது இணக்கத்துடன் ஏற்படுத்தப்படுகின்ற தீர்வானது மக்களின் அங்கீகாரத்துக்காக விடப்படும். அதாவது, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்ற நிலையில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவோம்.

அதேநேரம், தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் இனவாதம், மதவாதத்தை பேசவில்லை. அவ்வாறு பேசுவதற்கு இடமளிக்கவும் இல்லை. வழக்கமாக ஆளுந்தரப்புத் தான் அவ்விதமான மனோநிலையில் செயற்படும்.

ஆனால் இம்முறை அவ்விதமான நிலைமை காணப்படவில்லை. ஆகவே இந்த மாற்றமானது, புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் செயற்பாடுகளுக்குச் சவால்களை அளிக்காது என்றே கருதுகின்றேன். நிச்சயமாக மக்கள் எதிர்பார்க்கின்ற முறைமை மாற்றமொன்று ஏற்படும் என்றார். (ந-7)

## அத்தியாவசிய...

தேங்காய் ஆகிய உணவுப் பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளன. அரிசித் தட்டுப்பாட்டுக்கான குறுகிய கால தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் சந்தைக்கு அரிசியை விநியோகிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம். அரிசி மற்றும் தேங்காய் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கி வைக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவாது. பெரும்போக விவசாயத்துக்குத் தேவையான வளங்கள் பெற்றுக்கொடுக்கப்படும். பண்டிகை காலத்தை முன்னிட்டு அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளை குறைக்க உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்றார். (ந-7)

## யாழ். தேர்தல் மாவட்டம் 34 வேட்பாளர்களின் கணக்கறிக்கை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 396 வேட்பாளர்களில் 362 வேட்பாளர்கள் தமது தேர்தல் செலவறிக்கையைத் தாக்கல் செய்துள்ளதாகவும் 34 வேட்பாளர்கள் தமது செலவறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாகவும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அமலராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. இரண்டிலுமாகச் சேர்த்து 396 வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் வேட்பாளர்கள் தமது கணக்கறிக்கையைத் தாக்கல் செய்யவேண்டும் என்பது இம்முறை கட்டாய சட்டமாக்கப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வரை அதற்காக அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில், 396 வேட்பாளர்களில் 362 வேட்பாளர்கள் தமது தேர்தல் கணக்கறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர் என்றார். (ந-7)

## துப்பாக்கி...

கைவசம் வைத்திருந்த ஜெயபுரம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜெயபுரம் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஜெயபுரம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ந-7)

## கடமையில்...

செயலாளர் டிம் எண்டர்லினிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவிஸ்சர்லாந்தின் வெளிவிவகாரங்களுக்கான பெடரல் திணைக்களத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கான இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லின் இரண்டு நாட்கள் வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து உரையாடியிருந்தார்.

இதன்போது, இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லின் புதிய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் உறவுகளின் நிலைப்பாடு தொடர்பில் கேள்விகளை தொடுத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த உறவுகள், போரின் பின்னரான 15 ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த எந்தவொரு அரசாங்கமும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய கரிசனைகளைக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபட்டுக்கொள்ளவும், சர்வதேசத்தினை ஏமாற்றுவதற்காகவுமே வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்தினை அரசாங்கம் ஸ்தாபித்தது. அதில் ஒரு சம்பவத்தினைக் கூட முறையாக விசாரணைக்கு உட்படுத்தவில்லை. வெறுமனே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கி இறப்புச் சான்றிதழை வழங்குவதற்கே அந்த அலுவலகம் முனைந்தது.

அதனாலேயே நாம் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினை முற்றாக நிராகரித்தோம். தற்போதும் நிராகரிக்கின்றோம். ஆனால் அநுரகுமார தலைமையிலான அரசாங்கமும் நாம் நிராகரித்த அந்த அலுவலகத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இதன் காரணமாக புதிய அரசாங்கத்தின் மீதும் எமக்கு நம்பிக்கை இல்லாத நிலைமையே காணப்படுகிறது.

விசேடமாக, பாதிக்கப்பட்ட எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாக, சில விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

ஆகவே நாம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைப்பதாக இருந்தால் குறித்த அதிகாரிகள் மீது பகிரங்கமான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறான விசாரணையை முன்னெடுப்பதன் ஊடாக அரசாங்கம் எமக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு முனைகிறது என்ற நிலைப்பாட்டை எம்மால் கொள்ள முடியும்.

அந்தவகையில் அரசாங்கம் ஆணைக் குழுக்களை அமைப்பதாலோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினை செயற்படுத்துவதாலோ எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படப்போவதில்லை. அதேநேரம், சர்வதேச சமூகமும் எமக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேச பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றனர். (ந-7)


பணியாளர் தேவை

உடுவில் பிரதேச எல்லைக்குள் வீடு, வளவு பராமரிப்பதற்கு ஆண் பணியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை : 40 - 65 வரை
தொடர்புகளுக்கு :
074 049 1582
(2719)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 (ஆகாஸ்)
(C-1749)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-1748)

வேலையாட்கள் தேவை
ஆவரங்காலில் உள்ள அசைவ உணவகத்திற்கு சமையல் மற்றும் கொத்து, றைஸ், அப்பம் போடத் தெரிந்த வேலையாட்கள் இருவர் தேவை, குறிப்பு : முன் அனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
076 844 2592
077 783 6378
(602)

PREGNANCY VOUCHER
கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)
Happy Super market - உரும்பிராய்
077 780 8030
(613)

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
Lanka Cargo Worldwide Express
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 038 5584
(614)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.